1983 பிப்ரவரி 5]

(இ) நகர்புறத்தில் சுமார் 1745 பேருந்துகளும் வெளியூரில் சுமார் 1,055 பேருந்துகளும் விடப்பட்டன.

(ஈ) 481 பேருந்துகள் கிராமப்புறங்களில் புதிதாக தொடங்கியுள்ள நகர்புற வழித்தடங்களில் இயக்கப்பட்டன

பழனியிலிந்து பெங்களூருக்கு பேருந்து விடும் திட்டம்

*வினா எண். 156 திரு. என். பழனிவேல் மாண்புமிகு போக்குவரத்துதுறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா

(அ) பழனியிலிருந்து பெங்களூருக்கு திருவள்ளுவர் போக்குவரத்துகழகத்தின் பேருந்து விடும் உத்தேசம் அரசுக்கு உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) ஆம்.

(ஆ) இத்தடம், கர்நாடகம், தமிழ்நாடு ஆகிய இரு மாநிலங்களிலும் அமைந்திருப்பதால் இம்மாநில அரசுகளின் இடையே ஓர் ஒப்பந்தம் ஏற்பட்ட பின்னர் இத்தடத்தை திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் இயக்கும்.

திரு. கே. ஆர். சுந்தரம் : தலைவரவர்களே, பழநியிலிருந்து பெங்களூருக்கு பேருந்து விட கர்நாடக அரசின் ஒப்புதலைப் பெற வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். வடாற்காடு மாவட்டம் குடியாத்தத்திலிருந்து ஓசூருக்கு ஒரு பேருந்து செல்கிறது, அதை பெங்களூர் வரை நீட்டிக்க அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவரவர்களே. அதற்கும் இதைப்போன்று ஒரு ஒப்பந்தம் தேவை. அதற்கு ஒப்பந்ததேதி அறிவிக்கப்படும் போது இதையும் பரிசீலனை செய்யலாம்.

திரு. ஜி. மூர்த்தி: தலைவரவர்களே. வேலூரிலிருந்து பெங்களூருக்கு இப்போது புதிதாக இரண்டு, மூன்று பேருந்துகளை அரசு விட்டுக்கொண்டிருக்கிறது. அவை பேரணாம்பட்டு வழியாக பெங்களூருக்குச் சென்றால் சுமார் 40 கிலோ மீட்டர் தூரம் மிச்சப்படும். அதே நேரத்தில் அதிகமான பயணிகள் பேரணாம்பட்டிலிருந்து பெங்களூருக்கு செல்கிறார்கள். ஆகவே: பயணிகள் வசதியை முன்னிட்டு பேரணாம்பட்டு வழியாக அந்த பேருந்துகளைவிட அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு.சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, அந்த தூரம் இவைகளையெல்லாம் கணக்குப் போட்டுத்தான் சொல்ல வேண்டும். அவர்கள் சொல்கிறபடி குறைவான தூரமாக இருந்தால் அதைப்பற்றி அரசு ஆலோசிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண்கள் 157,158 மற்றும் 159 ஆகியவை அமைச்சருடையவேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்பெறுகின்றன.
வினாக்கள் விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி யிடப்பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்

(அ)முன் அனுமதியின்றி எழுப்பப்பெறும் பிரச்சினை

திரு. மு. அம்பிகாபதி : பேரவைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர், தமிழகத்தில் ஆர். எஸ். எஸ். பயிற்சி நடத்தக் கூடாது என்று தடைவிதிக்கப்பட்டிருக்கிறதே

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்தப் பயிற்சிகளைப் பற்றியெல்லாம் முறைப்படி அவையில் கொண்டு வர வேண்டும். பாயின்ட் ஆப் ஆர்டரில் அதுபற்றியெல்லாம் கேட்கக் கூடாது.

திரு. மு. அம்பிகாபதி : சபாநாயகருடைய கவனத்தை நேரிடையாக ஈர்க்கும் பொருட்டுத்தான், நான் அதை இங்கு எழுப்பினேன்.

மாண்புமிகு பேவைத் தலைவர் : இதுபோன்ற பிரச்னைகளுக்கு எப்படி சபாநாயகருடைய கவனத்தைக் கவர்வது என்பதற்கு விதிகள் உள்ளன, புத்தகத்தை படியுங்கள். அதைப் படித்த பின்னர் கவரலாம் திடீர் திடீர் என்று கவரக் கூடாது.

(ஆ) வினாக்களுக்கான விடைகள்

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர்களால் கேட்கப்பட்ட வினாக்கள் எல்லாம், கேட்கப்பட்ட 49 நாட்களுக்குள் லிஸ்டிலே வரவேண்டும் என்கிற விதி இருக்கிறதே. ஆனால் நான் கேட்டு 42 மாதங்கள் ஆகி விட்டது. இதுவரையில் பதில் இல்லை. ஆகவே அந்த பதில்களை வாங்கிக் கொடுக்கும்படி உங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.